# ஆயர் மடல் . . .

ஆண்டவரும் மீட்பரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை அன்போடு வாழ்த்துவதிலும் இம்மடல் மூலம் மீண்டும் உங்களோடு தொடர்பு கொள்வதிலும் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

கடந்த மாதத்தில் நாம் செய்த ஊழியங்களில் ஆண்டவர் நம்முடனிருந்து ஆசீர்வதித்ததற்காக நன்றி செலுத்துவோம்.

இந்த ஆண்டிலும் கர்த்தரின் பெரிதான கிருபையால் VBS -2017 “How Beautiful” **எவ்வளவு அழகானவைகள்** (எண்ணாகமம.24:5) என்ற கருப்பொருளின் அடிப்படையில் நடத்தப்பட்டது. இவ்வூழியத்தில் இயக்குநர்களாக, ஆசிரியர்களாக, தன்னார்வ ஊழியர்களாக, ஜெபபங்காளர்களாக, ஈகையாளர்களாக, ஒத்தாசையாளர்களாக செயல்பட்ட திருச்சபையின் விசுவாச குடும்பத்தார், சகோதரர்கள், நண்பர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

2017-2018-ல் புதிய கல்வியாண்டிற்குள் கடந்து செல்ல இருக்கும் நம்முடைய பிள்ளைகள் யாவரையும் ஆண்டவர்தாமே தம்முடைய பரத்தின் ஞானத்தினால் நிறைத்து ஆசீர்வதிப்பாராக. 12-ம் மற்றும் 10-ம் வகுப்பு தேர்வு எழுதியிருக்கிற பிள்ளைகள் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறவும் உயர் கல்விக்காக பெற்றோர் எடுக்கும் முயற்சியில் கர்த்தரின் கிருபை உடனிருக்கவும் ஜெபிப்போம்.

21-04-2017 அன்று நடைபெற இருக்கும் சபைநாள் சிறப்பு ஆராதனைக்காக ஜெபித்துக் கொள்ளுவோம். சபை வளர்ச்சியில் நாம் பெற்றுக்கொண்ட அனைத்து நன்மைகளுக்காகவும் ஆண்டவரைத் துதிப்போம். கிறிஸ்துவின் பிள்ளைகளாய் இணைந்து மகிழ்வோடு சபைநாளை கொண்டாடுவோம்.

கடந்த நாட்களில் தேவசமூகத்தில் பாரத்தோடு, நம்பிக்கையோடு ஜெபித்த பிள்ளைகளுக்கு ஆண்டவர் கொடுத்திருக்கும் சரீர பெலனுக்காகவும், நல்ல பணிகளுக்காகவும் துதிப்போம்.

கிறிஸ்துவின் பணியில்

**அருட்திரு.சே.டேவிட்சன் பால் ஜேக்கப்**

தியானம்

# பரலோக ராஜ்ஜியம்

**என்னுடையதை என் இஷ்டப்படி செய்ய எனக்கு அதிகாரமில்லையா? நான் தயாளனாயிருக்கிறபடியால் , நீ வன்கண்ணனாயிருக்கலாமா ?**

**மத்தேயு 20 :15**

இந்த உவமையில் பரலோகராஜ்யம் வீட்டெஜமான் ஒருவருககு ஒப்பாக சொல்லப்பட்டுள்ளது. அந்த மனிதரின் கேள்வியே இது. அம்மனிதரின் தன்மைகள் மற்றும் செயல்களையும் அவரது உன்னத குணத்தினை மதிக்காத பணியாளரது எண்ணங்களையும் இந்த உவமையில் காண முடிகிறது.

**1.துரித செயல்பாடு:(20:1)**

யார் நமது காரியமாய் போவார் என்ற ஏக்க குரலும் அறுப்போ மிகுதி ஆட்களோ கொஞ்சம் என்ற தேவை உணர்தலும் அறிந்த மனிதரால் தாம் தமது கண்களுக்கு உறக்கத்தை விரும்பாமல் அதிகாலையிலே பணி செய்ய முடியும். அதிகாலையில் புறப்படுதல் என் பதை பரலோக ராஜ்யத்திற்கான துரித செயல்பாடாக புரிந்து கொள்ளலாம்.

**2.இடைவிடாத அழைப்பு:(20:2-7)**

மறுபடியும் மறுபடியும் அவர் ஊருக்குள் சென்று திராட்சை தோட்ட பணிகளுக்கு பணியாள் தேடுகிறார். இப்பொழுதும் வேலைக்காக அநேகர் காத்தும் அதி ல் சிலர் வெகு நாட்கள் ஆகியும் வேலை கிடைக்காமல் ஏமாற்றத்தோடு வெறுமையுடன் இருப்பதையும் நாம் காண்கிறோம். ஓய்வில்லாத உழைப்பும் அனைத்து மக்களுக்கான அழைப்பும் பரலோக ராஜ்யத்திற்கான தன்மையாகும்.

**3.சமத்துவ பகர்வு:(20:12-15)**

சிலருக்கு கூலி நிர்ணய அடிப்படையில் பணி கொடுக்கப்பட்டது. சிலருக்கு நியாயமான கூலி என்ற நம்பிக்கை அடிப்படையில் பணி கொடுக்கப்பட்டது. அனைவருக்கும் சம கூலி கொடுப்பதன் மூலம் அனைவருக்கும் சம அந்தஸ்தை தருகிறார். யாரும் யாரையும் எள்ளி நகையாடவோ யார் மீதும் பொறாமை கொள்ளவோ பரலோக ராஜ்யத்தில் இடமில்லை.

அவருடைய நன்மைகளை அனைவருடைய பசி தீர அவருடைய இஷ்டத்தின் படி சமமாக பகிர்ந்தளிக்க நம்மை தேடி அழைத்த அவருக்கு உரிமை உள்ளதா? இல்லையா ? சிந்திப்பீர்.

# செயலரிடமிருந்து.......

கிறிஸ்துவுக்குள் எனக்கு மிகவும் அன்பான உடன் விசுவாசிகளே, இயேசுகிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்களை கூறிக்கொள்கிறேன். கடந்த நாட்களில் தேவனுடைய கிருபை நம்மோடிருந்து நம்மை ஆசீர்வதித்து வழி நடத்தியதை நினைத்து நம் உள்ளத்தின் ஆழத்திலிருந்து தேவனுக்கு நன்றிசெலுத்த கடமைப் பட்டிருக்கிறோம்.

கடந்த மாதத்தில் நடைபெற்ற ஒவ்வொரு ஊழியங்களையும் தேவன் ஆசீர்வாதமாக்கி தந்தமைக்காக அவருக்கு மீண்டுமாக நன்றிகளை ஏறெடுப்போம். 01-03-17 ல் நடைபெற்ற சாம்பற்புதன் ஆராதனை ஆசீர்வாதமாக அமைய தேவன் கிருபைசெய்தார். அதில் அனேகர் கலந்துகொள்ளவும் தேவன் உதவிசெய்தார் அதற்காக தேவனைத் துதிப்போம்.

கடந்த 25-3-17 முதல் 31-3-17 தியதிவரை நாம் நடத்திய VBS, பிள்ளைகட்கு மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. திரு.டேனியல்;(Asst.Junior Church Director–DMR) திரு.ஜோசப் பால்சிங், (Asst.Youth Director – DMR) ஆகியோர் **VBS-DIRECTORS** ஆக செயல்பட்டு நமது பிள்ளைகட்கு அருமையான முறையில் வேதத்தை கற்பித்தது இந்த ஆண்டைய VBS ன் சிறப்பு அம்சமாக அமைந்தது. அவர்கட்கு திருச்சபையின் சார்பில நமது நன்றிகளை உரித்தாக்குவோம். மேலும் அவர்களை நமக்கு அனுப்பிதந்த மதுரை இராமநாதபுரம் பேராயர் அவர்கட்கும் நாம் மிகவும் கடமைப் பட்டவர்களாயிருக்கிறோம்.

அதைப் போல் இந்த ஊழியம் சிறப்பாக நடைபெறுவதற்கு தங்களை ஈகையாலும் உழைப்பாலும் ஐக்கியப்படுத்திக்கொண்ட ஒவ்வொருக்கும் திருச்சபையின் சார்பில் நன்றிகளை கூறுகிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக தங்கள் பிள்ளைகளை உற்சாகமாக அனுப்பிவைத்த பெற்றோர் ஒவ்வொருக்கும் நன்றி செலுத்துவோம்.

மேலும் இந்தமாதத்தில் நடைபெறும் குருத்தோலை ஞாயிறு(Palm Sunday),வியாகுல வியாழன் (Maundy Thursday), பெரிய வெள்ளி(Good Friday), உயிர்த்தெழுதல் பண்டிகை (Easter)ஆகிய எல்லா விஷேச

ஆராதனைகளிலும் பங்குபெற்று தேவஆசீர்வாதத்தைப் பெறுவோம். அதுபோல நாம் இந்தமாதத்தில் அனுசரிக்க திட்டமிட்டிருக்கிற சபை நாள் ஆராதனைக்காகவும் அதில் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்ள ஒப்புக்கொண்டிருக்கிற நமது முன்னாள் போதகர் Rev. Sunin Spenzer அவர்கட்காகவும் ஜெபிப்போம். தேவன் தாமே இவ்வெல்லா நிகழ்வுகளையும் நமக்கு ஆசீர்வாதமாக்கித்தருவாராக.

***M.நேசமணி.***

# WORSHIP TIMINGS – APRIL - 2017

MAIN WORSHIP HALL,
OASIS HOSPITAL COMPOUND,
AL AIN.

| | | |
|---|---|---|
| 1st & 3rd FRIDAYS | 7.00 pm | *COMMUNION SERVICE* |
| 2nd & 4th FRIDAYS | 7.00 pm | *EVENING SERVICE* |
| 2nd & 4th FRIDAYS | 6.30 pm | *BIBLE STUDY* |
| EVERY FRIDAYS | 6.30 pm | *JUNIOR CHURCH* |

## PARSONAGE, AL MUWAIJI

| | | |
|---|---|---|
| 07.04.2017 FRIDAY | 11.30 am | *FASTING PRAYER* |
| 08.04.2017 SATURDAY | 07.30 pm | *WOMEN'S FELLOWSHIP PRAYER CELL* |
| 15.04.2017 SATURDAY | 07.00 pm | *MEN'S FELLOWSHIP PRAYER CELL & CAMP MINISTRY* |
| 30.04.2017 SUNDAY | 11.30 pm | *MONTH END PRAYER* |

# சாந்தகுணம்

**"சாந்தகுணம் உள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் பூமியை சுதந்தரித்துக் கொள்வார்கள். (மத். 5:5).**

கோபம் உறவுகளை உடைத்து விடுகிறது.. ஆனால் சாந்தகுணமோ உறவுகளை ஊன்றக்கட்டுகிறது. கோபத்துக்கு மாற்று மருந்து சாந்தகுணமாகும். ஆவியின் கனிகளில் ஒன்று சாந்தமாகும். சாந்தகுணம் எப்பொழுதும் மற்றவர்களை அரவணைக்குமே தவிர, வெறுத்துதள்ளாது. வஞ்சகம் தீர்க்காது, அவசரப்படாது, அத்துடன் மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளும்.

இந்தியா ஆங்கிலேய ஆதிக்கத்தின் அடிமைத்தனத்தில் இருந்தபோது, அதை எப்படிவிடுவிப்பது என்று இந்திய தலைவர்கள் ஆராய்ந்தார்கள். அப்போது நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் போராட்டத்தின் மூலமாகவும் துப்பாக்கி முனையிலும் தான் சுதந்திரம் பெறமுடியும் என்று எண்ணினார். ஆனால் காந்திஜீயோ "சாந்தகுணம் உடையவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் பூமியை சுதந்தரித்துக் கொள்வார்கள்" என்ற வார்த்தையின்படி சாந்தத்தாலும் சத்தியாகிரகத்தாலும், அகிம்சையாலும் சுதந்திரம்பெற தீர்மானித்தார். ஆங்கிலேயர்கள் எவ்வளவோ அடக்குமுறையை கொண்டுவந்தபோதிலும். அவர் கோபத்திற்கு இடம் கொடுக்கவே இல்லை. இறுதியில் வெற்றிபெற்றது சாந்தம்தான்.

சாந்தகுணத்தை உலகத்தார் புரிந்துகொள்ளாமல் இருந்தாலும் அது மகாவல்லமையுள்ளது. பூமியின் சகல மனுஷரிலும் மோசே மிகுந்த சாந்தகுணமுள்ளவனாக இருந்தான் (எண்.12:3). அந்த சாந்தகுணத்தால்தான் இஸ்ரவேல் ஜனங்களை நாற்பது வருடங்கள் வனாந்தரத்திலே அன்போடும் பொறுமையோடும் நடத்திவந்தார்.

இயேசு கிறிஸ்துவை நோக்கிப் பாருங்கள், அவரிடத்தில் சாந்தம் என்னும் கனி அதிகமாய் காணப்பட்டது. “நான் சாந்தமும்,மனத்தாழ்மையாய் இருக்கிறேன்” என்றார் இயேசு கிறிஸ்து (மத்.11:29). அவர் சாந்தத்தை வெளிப்படுத்திக்கொண்டே இருந்தப்படியால் இன்றைக்கும் அவருடைய நாமம் பூமிமுழுவதும் நிரம்பியிருக்கிறது.

ஒரு குத்துச்சண்டைவீரன் கிறிஸ்துவுக்குள் இரட்சிக்கப்பட்டான். அதற்கு முன்பு கொடூரமான கொலைகாரனாயிருந்தான். ஒருமுறை அவர் தெருபிரசங்கம் செய்துகொண்டிருந்தபோது ஒரு குடிகாரன் அவரை வம்புசண்டைக்கு இழுத்தான். ஏன் மாடுபோல தெருவில் கத்துகிறாய்? என்று அசுத்தவார்த்தையால் அவரைதிட்டினான். முன்பு அவர் பயங்கரமான கோபக்காரன், குத்துசண்டைவீரன். இப்பொழுதோ கிறிஸ்துவின் அடிமை, ஆகவே அந்த குடிகாரனைப்பார்த்து என்னை மன்னித்துவிடு சகோதரனே என்று சொல்லிவிட்டு “ஆண்டவரே இந்த நிந்தனைக்காகூட உமக்கு ஸ்தோத்திரம் என்றாராம் சற்று நேரத்துக்குள்ளாக அந்த குடிகாரன் ரோட்டில் வழுக்கி விழுந்து எலும்புமுறிந்து உதவியில்லாமல் தவித்தப்போது, இவர்போய் அவனை மருத்துவனையில் கொண்டுசேர்த்தார். அவரைப்பார்த்து நீ என்னை தடியன் என்று திட்டினாய் பார் நான் தடியனாக இருக்கிறதினால் தான் உன்னை தூக்கிமருத்துவமனையில் சேர்க்க முடிந்தது என்று கூறினாராம். அவருடைய வார்த்தைகள் தெய்வீக அன்பை வெளிப்படுத்தியது.

ஆகவே நாமும் சாந்தகுணம் உடையவர்களாக இருக்கும்போது தேவன் நமக்கு சகாயராயிருப்பார். “உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக கர்த்தர் சமீபமாயிருக்கிறார்” (பிலி.4:5).

**- திரு.நெல்சன் சோபித ராஜ்.**

# "i loved you before you loved me"

From her bedroom window, Rebecca eyed the children playing in the snow enviously. How she longed to play with them!
"Now, Rebecca," she remembered her father telling her that morning. "You can't play in the snow today."
"Why not, Father?" Rebecca had asked. Every day, the neighborhood children gathered at a park just behind Rebecca's house.
"Just trust me, Rebecca. It's not what's best for you today," her father had replied.

At the time, Rebecca had responded by kissing her father on his cheek and assuring him that she would stay inside and read. But now she was having second thoughts.

*It is beautiful outside*, she thought to herself. It was true: the sun *was* shining brilliantly. Why wouldn't her father let her go play? Why should she have to miss out on all the fun?
When a snowball exploded just outside her window, Rebecca decided she couldn't stand it any longer. She simply had to go join the others!

Leaving her book on the table, Rebecca slipped outside. She tried to tell herself she was having a good time, but all the while her heart felt uncomfortable. She kept looking this way and that, fearful least her father see her.

After a few hours, Rebecca finally said her goodbyes and headed

back towards the house. She wanted to be safely lodged in her room before her father came home.

Intent onGETTING to her room as quickly as possible, Rebecca didn't see the mitten someone had left on the stairs until her foot slipped on it. Next thing she knew, she had fallen several stairs. To her horror, she noticed that she had hit her father's favorite picture when she fell! A huge gash ran along the front of the picture.

Normally, Rebecca would have hurried immediately to her father after such a fall so he could doctor her up and make her feel better. But not this time. How could she face her father right now? She had disobeyed him and ruined his favorite picture! Biting her lips to keep from crying out, Rebecca grabbed the ruined picture and hobbled to her room.

For the remainder of the day, she lay in agony. Her body ached from the bruises she received on her fall. But her heart—ah, that ached worse of all! She felt certain that her father would no longer love her. She had messed up in the past, but surely this time she had gone too far! He would probably never want to speak to her again. How could he still love her?

She sobbed uncontrollably on her pillow. She had always been close to her father. They had played and studied together. They had laughed and cried together. But not now. No, she felt certain that all those wonderful times were over.

Who knows how long she would have lain thus had not her nanny come in to check on her. Rebecca's nanny had a way about her of finding out exactly what was wrong and offering solid, wise counsel. Tonight was no exception.

"Rebecca, dear," she said firmly, but gently. "You've been very wrong. But you must not continue in your wrongness by sitting here. You must go to your father with the broken picture in your hand and tell him everything."

"Oh, but I can't! I'm not worthy of His love!" Rebecca sobbed. Her nanny sighed patiently. "You were no more worthy of it yesterday than today, child. Your father loves you because you're his daughter, not because of anything you do or don't do. Hasn't he told you everyday since you were a little girl, 'I love you'? Do you doubt his word? Do you really think his love is dependent on you?"

Doubt his word—that was an angle Rebecca had never thought of before. Maybe she should go see her father…yes, she must go see him, for if she didn't, she'd never be able to rest.
So, still shaking and trembling with fear, Rebecca limped down the hall to the living room. She paused at the doorway. Her father was sitting in his favorite chair, just like he did every night. He looked up when she entered, and a smile radiating with love illuminated his face.

"Ah, you've come at last! I've been waiting. Come, sit here on my

lap.” As he spoke, he opened his arms widely.
Rebecca couldn’t stand it. “Oh, you don’t understand, Father! You can’t love me anymore. I’ve been terribly wicked and-” Rebecca held up the picture frame for her father to see.
“I know, Rebecca—more than you think. I watched you go outside. I watched you fall and hit the picture frame. I saw it all.”
“You did?” Rebecca was flabbergasted. “But-but weren’t you atWORK?”

Her father shook his head. “I took the day off to spend some special time with you. That’s why I told you not to go outside to play. Ever since I saw you fall, I’ve been longing for you to come to me so I could bandage your wounds and help you. Won’t you come now?”

Rebecca could hardly believe her ears. Her father had planned to spend the afternoon with her…and she had missed it. Oh, what foolishness! Yet her father knew it all…and loved her anyway. Could it be? “But, Father, how can you love me now?”
Rebecca’s father smiled a smile she would never forget.

“Rebecca, dear, I loved you before you were born. You’re my daughter. And I will always love you. Although sometimes your actions will result in consequences you could have avoided, nothing can ever separate you from my love. Now won’t you come and let me help you with those bruises?”

*“Who shall separate us from the love of Christ? shall tribulation, or distress, or persecution, or famine, or nakedness, or peril, or sword? As*

*it is written, For thy sake we are killed all the day long; we are accounted as sheep for the slaughter. Nay, in all these things we are more than conquerors through him that loved us." Romans 8:35-37*

- ***Selected Article***

## *வேத வினா விடைப் போட்டி – 29 ( ஏப்ரல்)*

**( 2.இராஜாக்கள்.1-13 அதி.)**

1. வியாதி நீங்கி செத்துப்போன ராஜா யார்?
2. சமாரியாவின் பஞ்சம் எப்படிப்பட்டதாயிருந்தது?
3. தன் ராஜ்யபாரத்தில் கர்த்தரின் ஆலயத்தை பழுதுபார்த்தவன் யார்?
4. சூனேமியாளின் குமாரன் எத்தனைதரம் தும்பி தன் கண்களை திறந்தான்?
5. யெகூவின் சேனாதிபதி யார்?
6. இஸ்ரவேலுக்கு இரதமும், குதிரை வீரருமாயிருந்தவர் யார்?
7. ஒலிமுகவாசலில் செத்தவன் யார்?
8. தன் குமாரனுக்காக ராஜவம்சத்தாரை சங்காரம் பண்ணினவள் யார்?
9. ஆவியின் வரத்தைக் கேட்டவன் யார்?
10. யெரொபெயாமின் பாவங்களைவிட்டு விலகாதிருந்தவன் யார்?

***குறிப்பு:*** விடைகளுக்குரிய அதிகாரமும் வசனமும் குறிப்பிட்டு இந்த ஏப்ரல் மாதம் 20–ஆம் தேதிக்கு முன் ஆயருக்கு அனுப்பி வைக்கவும்.

### மார்ச் **மாத விடைகள்**

1. 1இராஜாக்கள்.18:4
2. 1இராஜாக்கள்.22:15
3. 1இராஜாக்கள்.12:8
4. 1இராஜாக்கள்.15:11
5. 1இராஜாக்கள்.19:18
6. 1இராஜாக்கள்.13:31
7. 1இராஜாக்கள்.16:18

8. 1இராஜாக்கள்.20:34
9. 1இராஜாக்கள்.14:4
10. 1இராஜாக்கள்.13:1

## மார்ச் மாத வேத வினா விடைப் போட்டியில் சரியான விடைகள் எழுதியவர்கள்

1. திருமதி. பிப்லின் நெல்சன்
2. திருமதி. ஹெலன் கம்பீரம்
3. திருமதி. ஜெயின் ராஜவேல்
4. திருமதி. பிரேமா ரூத் பிரேம்
5. திருமதி. ஷீபா பிரகாஷ்
6. திருமதி. ரூபா எசேக்கியேல்
7. திருமதி. அகஸ்டா லாரன்ஸ்
8. திருமதி. அனிதா சுரேஷ்
9. திருமதி. ஜோனிஷ் ஹெர்சில்
10. திருமதி. ஜெயந்தா பெல்வர்

மத்:16:24

**ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால் ,அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்.**

1 கொரி:1:18

**சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது**

# Daily Bible Reading April – 2017

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். (சங்.1:2)

| Date | Day | Morning | | Evening | |
|---|---|---|---|---|---|
| 1 | Sat | Judges.17 | நியாயாதிபதிகள்.17 | Matthew.21 | மத்தேயு.21 |
| 2 | Sun | Judges.18 | நியாயாதிபதிகள்.18 | Matthew.22 | மத்தேயு.22 |
| 3 | Mon | Judges.19 | நியாயாதிபதிகள்.19 | Matthew.23 | மத்தேயு.23 |
| 4 | Tue | Judges.20 | நியாயாதிபதிகள்.20 | Matthew.24 | மத்தேயு.24 |
| 5 | Wed | Judges.21 | நியாயாதிபதிகள்.21 | Matthew.25 | மத்தேயு.25 |
| 6 | Thu | Ruth.1 | ரூத்.1 | Matthew.26 | மத்தேயு.26 |
| 7 | Fri | Ruth.2 | ரூத்.2 | Matthew.27 | மத்தேயு.27 |
| 8 | Sat | Ruth.3 | ரூத்.3 | Matthew.28 | மத்தேயு.28 |
| 9 | Sun | Ruth.4 | ரூத்.4 | Mark.1 | மாற்கு.1 |
| 10 | Mon | 1Samuel.1 | 1சாமுவேல்.1 | Mark.2 | மாற்கு.2 |
| 11 | Tue | 1Samuel.2 | 1சாமுவேல்.2 | Mark.3 | மாற்கு.3 |
| 12 | Wed | 1Samuel.3 | 1சாமுவேல்.3 | Mark.4 | மாற்கு.4 |
| 13 | Thu | 1Samuel.4 | 1சாமுவேல்.4 | Mark.5 | மாற்கு.5 |
| 14 | Fri | 1Samuel.5 | 1சாமுவேல்.5 | Mark.6 | மாற்கு.6 |
| 15 | Sat | 1Samuel.6 | 1சாமுவேல்.6 | Mark.7 | மாற்கு.7 |
| 16 | Sun | 1Samuel.7 | 1சாமுவேல்.7 | Mark.8 | மாற்கு.8 |
| 17 | Mon | 1Samuel.8 | 1சாமுவேல்.8 | Mark.9 | மாற்கு.9 |
| 18 | Tue | 1Samuel.9 | 1சாமுவேல்.9 | Mark.10 | மாற்கு.10 |
| 19 | Wed | 1Samuel.10 | 1சாமுவேல்.10 | Mark.11 | மாற்கு.11 |
| 20 | Thu | 1Samuel.11 | 1சாமுவேல்.11 | Mark.12 | மாற்கு.12 |
| 21 | Fri | 1Samuel.12 | 1சாமுவேல்.12 | Mark.13 | மாற்கு.13 |
| 22 | Sat | 1Samuel.13 | 1சாமுவேல்.13 | Mark.14 | மாற்கு.14 |
| 23 | Sun | 1Samuel.14 | 1சாமுவேல்.14 | Mark.15 | மாற்கு.15 |
| 24 | Mon | 1Samuel.15 | 1சாமுவேல்.15 | Mark.16 | மாற்கு.16 |
| 25 | Tue | 1Samuel.16 | 1சாமுவேல்.16 | Luke.1 | லூக்கா.1 |
| 26 | Wed | 1Samuel.17 | 1சாமுவேல்.17 | Luke.2 | லூக்கா.2 |
| 27 | Thu | 1Samuel.18 | 1சாமுவேல்.18 | Luke.3 | லூக்கா.3 |
| 28 | Fri | 1Samuel.19 | 1சாமுவேல்.19 | Luke.4 | லூக்கா.4 |
| 29 | Sat | 1Samuel.20 | 1சாமுவேல்.20 | Luke.5 | லூக்கா.5 |
| 30 | Sun | 1Samuel.21 | 1சாமுவேல்.21 | Luke.6 | லூக்கா.6 |

# Birthday Celebrants in April – 2017

| Date | Name | Mobile No. |
|---|---|---|
| 02.04.2017 | Mr. Blessin Paul | 0563687363 |
| 02.04.2017 | Baby.Jecolia Paloma Jose | 0551871742 |
| 03.04.2017 | Mrs. T. Monica | 0508507652 |
| 06.04.2017 | Mr.Herchil Harish | 0562524659 |
| 09.04.2017 | Mr. Yobu | 0558328701 |
| 09.04.2017 | Mrs.Princy Ashok | 0525931927 |
| 13.04.2017 | Mrs.T. Prem Ruth | 0508507652 |
| 17.04.2017 | Ms. Diniya Sunshine | 0504491769 |
| 28.04.2017 | Mr. Santhosh Kumar | 0568752723 |
| 30.04.2017 | Baby. Sherin Shaw | 0559328750 |

# Wedding Anniversary in April – 2017

| Date | Name | Mobile No. |
|---|---|---|
| 19.04.2017 | Mr. Nelson Sopitha Raj<br>Mrs. Bibilin Christabel | 0556028865 |
| 26.04.2017 | Mr. Melbin Paul<br>Mrs. Shaly Jesie | 0563941817 |

*சிந்தனைக்கு.........*

## நகோமியோடிருந்த ரூத்

**"நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன்" (ரூத்.1:16).**

ரூத்தின் சரித்திரத்தில் நான்கு அதிகாரங்களே இருந்தாலும் அது ஆவிக்குரிய ஆழமான இரகசியங்கள் அடங்கிய புத்தகமாய் இருக்கிறது. ரூத், தன் மாமியாரையும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரையும் உத்தம இருதயத்தோடு பின்பற்றினபடியால், அவள் அழுகையின் பள்ளத்தாக்கை உருவநடந்து, அதை நீரூற்றாய் மாற்றிக் கொண்டாள்.
காட்டொலிவ மரமானது, நல்ல மரத்தோடு ஒட்டப்பட்டு, மேன்மையான கனியைக் கொடுப்பதுபோல, புறஜாதிப் பெண்ணாகிய ரூத் தேவ ஜனங்களோடே இணைந்து, புதிய சரித்திரம் படைத்தாள். புஜாதியாகிய நாமும் கூட, கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் புண்ணியத்தினாலே, பிதாவோடும், உலகமெங்கும் இருக்கிற பரிசுத்தவான்கள் அனைவரோடும் ஒன்றாக இணைக்கப்பட்டு, அவருடைய வாக்குத்தத்தங்கட்கு சுதந்தரவாளிகளாய் இருக்கிறோம்.

ரூத்தினுடைய தீர்மானம் நம்முடைய உள்ளத்தை ஆச்சரியப்படுத்துகிறது. நகோமியோடு எப்போதும் இருக்கத் தீர்மானித்த ரூத், முடிவில் இஸ்ரவேலின் சந்ததிக்குத் தாயாக மாறினாள். அவளுடைய சந்ததியில் தாவீதுபிறந்தார். தாவீதின் வம்சம் இயேசுகிறிஸ்து. மோசே, நாற்பதுவருடம் பார்வோனுடைய அரண்மனையிலே வளர்ந்தாலும், ஒருநாள் அரண்மனையில் இருப்பதா? அல்லது தேவஜனமாகிய இஸ்ரவேலரோடே இருப்பதா? என்பதை தெரிந்துகொள்ள வேண்டியதாயிருந்தது. வேதம் சொல்லுகிறது, "அநித்தியமான பாவசந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்துகொண்டார்" (எபி.11:25).


இயேசு சீஷர்களை அழைத்தபோது தொழிலிலே மீன்களோடும், வலைகளோடும் இருப்பதா? அல்லது கிறிஸ்துவோடு இருப்பதா? என்று தீர்மானிக்க வேண்டியதாயிருந்தது. அவர்கள் இயேசுவோடு இருந்ததினால் பிற்காலத்தில் எழும்பி பிரகாசித்தார்கள். ஆவியின் வரங்களோடும் வல்லமையோடும் செயல்படடார்கள். நாம் கிறிஸ்துவோடு இருப்பதின் நிமித்தம் ஒருவேளை உலகம் நம்மை நிந்திக்கக்கூடும். பாடுகளும், உபத்திரவங்களும், நிந்தைகளும்

வரக்கூடும். “உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்” என்று இயேசு சொன்னார்.(யோவா.16:23). அருமையானவர்களே நாம் கர்த்தரோடு இருக்கும்படி உறுதியாய் தீர்மானித்துக் கொள்வோம். கர்த்தரை பின்பற்றுவதில் ஒருபோதும் இருமனமுள்ளவர்களாய் காணப்படவேண்டாம். இந்த உலகத்தில் மிகச்சிறந்த ஒருபாக்கியம் உண்டு என்றால் அது கர்த்தரோடு இருப்பதும், அவருடைய அன்பை ருசிப்பதும், அவரை பிரியப்படுத்துவதுமே ஆகும்.

**“இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாய் இருக்கிறான்(யாக்.1:8). அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக”.(யாக்.1:7)**

*M. Nesamony*

## CARTOON OF THE MONTH




# Easter Festival Holy Communion Service

**16.04.2017    7.00 pm    Main Hall**

**1972ம் வருடம் - கிறிஸ்தவர் கள் எரிக்கப்பட்ட இடத்தில்**

ஜப்பானியர்கள் கொரியா தேசத்தை கைப்பற்றி அதில் ஊடுருவி இருந்தார்கள். மற்ற எல்லாரை பார்க்கிலும் ஜப்பானியர் கொரியர்களிடம் மிகவும் மோசமாக நடந்து கொண்டார்கள். விசேஷமாக பெண்களையும் ;, சிறு குழந்தைகளையும் அவர்கள் நடத்திய விதம் மிகவும் கொடுமையானது. இன்றளவும் அந்த காயங்களை மனதில் சுமந்தபடி வாழுகின்ற கொரியர்கள் உள்ளனர்.



.

ஜப்பானியர்கள் கொரியாவை கைபற்றியவுடன் முதலில் செய்த காரியம் , அங்கிருந்த தேவாலயங்களை இழுத்து மூடியதுதான். மற்றும் வெளிநாட்டிலிருந்து வந்த மிஷனெரிகளை உள்ளே அனுமதிக்க மறுத்தனர். ஞாயிற்று கிழமைகளில் ஆராதனைகளை முழுவதும் நிறுத்திய ஜப்பானியர், முக்கியமான போதகர்களை சிறையில் அடைத்தனர். அதில் ஒரு போதகர் மாத்திரம் தான் இருந்த இடத்தின் காவல் துறை அதிகாரியிடம் அடி ;ககடி போய், தன் சபையை ஒரு ஞாயிறு ஆராதனையை மாத்திரம் அனுமதிக்கும்படி கேட்டு கொண்டே இருந்தார். அவருடைய தொல்லையை பொறுக்காமல் , அந்த அதிகாரி ஒரு ஞாயிறு ஆராதனைக்கு அனுமதித்தார். உடனே வேகமாக செய்தி பரவியது. இதுவரை ஆராதனைக்கு செல்ல முடியாமல் இருந்த கிறிஸ்தவர்கள் , அனுமதி கிடைத்தவுடன் , சூரியன் உதிக்குமுன் , குடும்பமாக ஆலயத்திற்கு சென்று, காத்திருந்து, நேரமான உடன் , கதவுகளை அடைத்து கர்த்தரை ஆராதிக்க ஆரம்பித்தனர்.

கொரிய சபை மக்கள் மிகவும் அழகாக பாடுபவர்கள். அவர்களின் பாடல் சத்தம் மூடியிருந்த கதவுகளையும் மீறி வெளியே அழகாக ரீங்காரமிட

**ஆரம்பித்தது. அவர்கள் உம்மண்டை கர்த்தரே என்னும் பாடலை பாட ஆரம்பித்தபோது, வெளியே இருந்த ஜப்பானிய அதிகாரி ஒருவன் தன் படைக்கு உத்தரவிட ஆரம்பித்தான். ஆலயத்தின் பின்புறம் இருந்தவர்கள் , கதவுகள் திறக்கப்படும் சத்தத்தை கேட்டார்கள். ஆனால் அவர்கள் ஒருவரும் அறியவில்லை, அந்த ஆலயம் முழுவதும் மண்ணெண்ணையால் ஜப்பானியர் முழுக்கி கொண்டிருக்கிறார்கள் என்று. பின் அதன் மேல் நெருப்பை வீசி , புகை வர ஆரம்பித்த போதுதான் , உள்ளே இருப்பவர்களுக்கு தங்கள் ஆலயம் நெருப்பு வைக்கப்பட்டிருக்கிறது என்று தெரிய வந்தது. உடனே உள்ளே இருந்தவர்கள் ஜன்னலின் வழியாக தப்பும்படி வெளியே போக துடித்த போது , வெளியே இருந்த ராணுவத்தினரின் துப்பாக்கி குண்டுகள் அவர்கள் மேல் பாய்ந்தது.**

**போதகருக்கு தெரிந்தது , தனக்கும் தன் சபையினருக்கும் இதிலிருந்து தப்பிக்க முடியாது என்று. வெளியே கொரியர்கள் தங்கள் மக்களுக்கு நடந்து கொண்டிருக்கும் அநீதியை கண்டு கொண்டிருக்க , போதகர், இந்த பாடல் வரிகளை பாட ஆரம்பித்தார் , உடனே சபையாரும் அவருடன் இணைந்து , தங்கள் கண்களுக்கு முன் நெருப்பு கொழுந்து விட்டு எரிய தங்கள் கூரைகீழே விழுந்து அனைவரும் மடிவதற்கு முன் பாடினார்கள்,*But drops of grief can ne'er repay the debt of love I owe: Here, Lord, I give myself away 'Tis all that I can do! At the cross, at the cross Where I first saw the light, And the burden of my heart rolled away -- It was there by faith I received my sight, And now I am happy all the day.* அவர்கள் பாடியதை வெளியே இருந்த ஜப்பானியரும் , கொரியர்களும் கேட்டு கொண்டிருந்தார்கள். அவர்கள் பாடியபடியே மறுமைக்கு கடந்து சென்றார்கள்.**

**எரிந்து போனவர்களின் சடலங்களை எடுத்து சுத்தம் பண்ணுவது எளிது , ஆனால் உள்ளத்தில் எரிந்து கொண்டிருந்த வேதனையையும், வெறுப்பையும்**

எடுத்து விடுவது எளிதல்ல. அதுவும் மரித்தவர்களின் உறவினர்கள் ஜப்பானியரின் மீது கொண்டிருந்த வெறுப்பு அதை அணைப்பது என்பது மிகவும் அரிதானதாக மாறியது.

வருடங்கள் கடந்தன. கிறிஸ்தவர்க்ள எரிக்கப்பட்ட இடத்தில் ஒரு ஞாபகார்த்த மண்டபம் கட்டப்பட்டது.அதை காணும்போதெல்லாம் கொரியர்களின் உள்ளங்களில் ஜப்பானியர்களின் மேல் வெறுப்பு அதிகமாய் கொழுந்து விட்டு எரிந்தது. கிறிஸ்தவர்களாயிருந்தாலும், உலகம் தரக்கூடாத சமாதானத்தை கொடுக்கும் கிறிஸ்துவின் சமாதானம் அவர்களது உள்ளத்திலிருந்த வெறுப்பினால் மறைந்து போயிருந்தது. ஆனால் அது அப்படியே இருக்கவில்லை.

1972ம் வருடம் ஜப்பானிலிருந்து ஒரு போதக குழு கொரியாவிற்கு வந்தார்கள். அவர்கள் அந்த ஞாபகார்த்த மண்டபத்திற்கு வந்த போது , தங்கள் மூதாதையர் செய்த குற்றத்தை கண்டார்கள். அவர்களுக்கும் அந்த செய்கைக்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்றாலும், தங்கள் நாடு தப்பிதம் செய்து விட்டது என்ற குற்ற உணர்ச்சியுடன் , தங்கள் நாட்டிற்கு திரும்பி சென்று, தங்கள் கூட இருக்கும் விசுவாசிகளிடம் நடந்த விஷயங்களை கூறி, பணம் சேகரித்து, திரும்ப வந்து, கிறிஸ்தவர்கள் எரிக்கப்பட்ட இடத்தில் ஒரு அழகான ஆலயத்தை கட்டினார்கள். அது திறக்கப்படும் நாளிலே அனைவரும் கூடி, அந்த ஆலயத்தை கர்த்தருக்கு அர்ப்பணித்து , ஆராதனை முடியும் தருவாயில், ஒருவர் எழுந்து , அந்த எரிந்து போன கிறிஸ்தவர்கள் பாடிய இரண்டு பாடல்களையும் மீண்டும் பாடுவது , அவர்களை நினைவு கூருவது போலிருக்கும் என்று கூற , உம்மண்டை கர்த்தரே நான் சேரட்டும் என பாடலை பாட ஆரம்பித்தார்கள். பாடி முடித்து , சிலுவையண்டையில் நம்பி வந்து நிற்கையில் ***(At the cross at the cross where I first saw the light)*** என்ற பாடலை பாடும்போது , ஜப்பானிய போதகர்களின் கண்களில் கண்ணீர் வழிய ஆரம்பித்தது. அவர்கள் தங்கள் கொரிய நண்பர்களின் கரங்களை பிடித்து கொண்டு , கண்ணீரோடு தங்களை மன்னிக்குமாறு

கெஞ்ச ஆரம்பித்தார்கள். கொரியர்களின் இருதயம் கரையவில்லை , ஆனாலும் விடாமல் ஜப்பானியர்கள் கேட்டு கொண்டிருந்தபோது , அந்த பாடலின் அர்த்தத்தை அவர்கள் கேட்டு கொண்டிருந்தபோதுதானே , கர்த்தர் கொரியர்களின் இருதயத்தில் கிரியை செய்ய ஆரம்பித்தார். ஒரு கொரிய சகோதரன், ஜப்பானிய சகோதரனின் கரங்களை பிடித்தார். அதை கண்ட மற்றவர்களும் ஒருவரை யொருவர் கட்டிபிடித்து கொண்டு கதற ஆரம்பித்தனர். அத்தனை நூற்றாண்டுகளாக இருந்த பகைமை மறைந்து கிறிஸ்துவின் அன்பு பெருக்கெடுக்க ஆரம்பித்தது. ஜப்பானியரின் மன்னிப்பின் கண்ணீரும், கொரியர்களின் மன்னித்ததன் கண்ணீரும் கலந்து , அந்த இடம் முழுவதும் தேவ பிரசன்னத்தால் நிரம்பியது

- **தொகுப்புக் கட்டுரை**



# வேதாகமத்தில் பெண்கள் - பிலாத்துவின் மனைவி

அவன் நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்கையில் அவனுடைய மனைவி அவனிடத்தில் ஆளனுப்பி நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்ய வேண்டாம்.அவர் நிமித்தம் இன்றைக்குச் சொப்பனத்தில்வெகுபாடு பட்டேன் என்று சொல்லச் சொன்னாள். மத்தேயு 27:19

தேசாதிபதியான பிலாத்து இயேசுவை விடுதலை செய்ய விரும்பியும் அது நடக்காமல் போய்விட்டது. அவனுடைய மனைவியும் ஆளனுப்பி நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்ய வேண்டாம் என்று சொல்லியும் பிலாத்து அதற்க்குச் செவி சாய்க்கவில்லை.அவன் இயேசு கிறிஸ்துவை விடுதலை செய்யாமல் பிரதான ஆசாரியரின் விருப்பப்படிச் செய்தான். அவனுடைய பிந்தின நாட்களில் அவன் சமாதானம் இல்லாமல் இருந்தான். பிலாத்துவின் மனைவியின் ஆலோசனையை அவன் ஏற்காததால் உலகத்தை படைத்தவரையே குற்றத்திற்கு அகப்படுத்தி விட்டான். சொப்பனம் கண்ட பிலாத்துவின் மனைவி தைரியமாக செயல்பட்டிருக்கலாம் .

நமக்கும் தேவன் இப்படிப்பட்ட விசேஷித்த ஆவியை கட்டளையிட்டிருந்தால் நாம் அதை சரியாக உபயோகித்து மற்றவர்களை கஷ்டங்களிலிருந்து விடுவிப்போம். பிரியமானவர்களே, நமக்கும் தேவன் முன்கூட்டியே ஏதாவது ஒன்றை தரிசனத்தில் உணர்த்துவாரானால் அதை தைரியமாக மற்றவர்களுக்கு எடுத்துக் கூறுவோமானால்,வர இருக்கிற ஆபத்து நீங்கும். கர்த்தருடைய நாமமும் உயர்த்தப்படும். தருணங்களை பயன்படுத்தி செயல்படுவோம்.

ராஜா தானியேலை நோக்கி, நீ இந்த மறைபொருளை வெளிப்படுத்தினபடியினால், மெய்யாய் உங்கள் தேவனே தேவர்களுக்கு தேவனும்,ராஜாக்களுக்கு ஆண்டவரும், மறைபொருள்களை வெளிப்படுத்துகிறவருமாயிருக்கிறார் என்றான். தானியேல் 3:47.

Mrs.ஜெனிபர் டேவிட்சன்

# Coloring Page for Kids

## Samuel Anoints David



**Congrats who have done all**

*1)Jayne 2) Erline Berniceraj 3) Eric Jayden 4)Jonathan 5)Geovin 6)Jeremiah 6)Jemima 7) Johan Sanjo 8) Ridhun 9) Angelin steffina*

# Bible Wordsearch

## John the Baptist

Wordsearch 255

Matt.11:4-17

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| B | J | P | E | G | R | I | D | E | P | L | A | Y | E | D |
| M | E | R | J | R | D | A | E | H | A | N | E | M | O | W |
| O | S | O | O | E | G | N | I | L | L | I | W | P | L | E |
| D | U | P | H | A | J | I | L | E | A | D | B | N | T | S |
| G | S | H | N | T | R | E | P | D | W | A | E | H | T | W |
| N | R | E | C | E | I | V | E | O | P | R | G | R | R | R |
| I | L | T | O | R | S | L | R | T | D | I | O | I | A | M |
| K | P | U | O | K | E | C | I | L | S | P | T | I | O | R |
| G | B | R | F | A | N | S | I | S | E | T | S | U | T | D |
| D | N | L | E | E | T | H | E | R | E | E | R | T | R | H |
| C | E | I | E | P | C | C | O | N | D | N | S | A | E | E |
| U | C | Y | L | S | A | R | C | L | O | T | H | E | S | A |
| R | N | V | A | L | S | R | O | T | R | U | T | H | E | V |
| E | A | E | A | W | A | E | E | F | L | U | T | E | D | E |
| D | D | P | M | E | S | C | D | E | S | S | E | R | D | N |

AHEAD, BAPTIST, CROWD, BLESSED, CURED, CALLING, DANCE, CHILDREN, DESERT, CLOTHES, DIRGE, DRESSED, ELIJAH, FORCEFUL, FLUTE, GREATER, JESUS, HEAVEN, JOHN, KINGDOM, MOURN, PALACES, PLAYED, PREPARE, RAISED, PROPHET, REPORT, RECEIVE, RISEN, REPLIED, SIGHT, SWAYED, SPEAK, WILLING, TRUTH, WOMEN, WRITTEN

After you find all the hidden words the left over letters spell out a Bible verse reading from the top left to the bottom right

__ __   __ __ __ __ __ __ __ __ __   __   __ __ __ __ __

__ __   __ __ __ __ __ __   __ __

MORE PUZZLES AT:
http://biblewordgames.com COPYRIGHT 2016 ALL RIGHTS RESERVED

Dear Children, please find these words and circle them, cut this puzzle and hand over to Pastor Uncle on or before 20th April 2017.

**<u>Congrats you have done all</u>**

1)Eastrine
2) Mercy
3)Dennis Roger
4) Shelbino
5) Jesvin
6) Diniya Sunshine
7) Angelin Sophia Nelson
8) Annlin Sophia Nelson
9) Joshua
10) Joshika Varshini
11) Merwin Samuel
12) Gain
13) Roshan

# YOUTH- CROSSWORD PUZZLES

## Love Your Enemies



"You have heard that it was said, 'Love your neighbor and hate your enemy.' But I tell you: Love your enemies and pray for those who persecute you." Matthew 5:43-44

Each number represents a letter of the alphabet. Substitute the correct letter for the numbers to reveal the coded words.

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| O | Q | W | H | A | U | D | K | F | Z | J | P | S | Y | I | V | R | B | E | M | N | L | C | X | T | G |

1. 12-17-5-14 ________________
2. 22-1-16-19 ________________
3. 19-16-15-22 ________________
4. 9-17-15-19-21-7-13 ________________
5. 17-19-3-5-17-7 ________________
6. 26-1-1-7 ________________
7. 4-5-25-19 ________________
8. 19-21-19-20-14 ________________

## Answers for the Previous Month:

Forgive, Jordan, John, Dove, Repent,
Confess, Water, Sin, Voice, Honey

**Congrats who have done all**

*D.P. Joseph Jovin*

# MY GOD WILL LEAD THE WAY….

**My God will lead me in the way I must walk,**
**My God will guide me in the path that I must follow,**
**My God will lift me up, and set my feet upon the rock,**
**My God will be always be with me, in times of Joy and Sorrow..**

**If I were Noah,**
**My God will lead me and my family to safety,**
**And lead me through the Flood…**

**If I were Abraham,**
**My God would lead me out of my Father's place,**
**And make a covenant to give my descendants the land of Canaan.**

**If I were Moses,**
**My God would have spoken to me,**
**And would have sent me out to lead the people of Israel out of Egypt..**

**If I were Samuel,**
**My god would have led me,**
**And helped me to judge with Justice...**

**If I were David,**
**My god would have led me in every battle,**
**And would have helped me to deliver the people of Israel…**

**If I were King Solomon,**
**My god would have given me the wisdom,**
**To Judge the people of Israel…**

**But as God created me in his own fashion**
**I would just pray that,**
**"My God must lead me in the way I must walk,**
**My God must guide me in the path that I must follow"**

# இயேசுவின் அதிகாரம்

மத் 21: 23
எந்த அதிகாரத்தால் நீர் இவற்றை செய்கிறீர்? இந்த அதிகாரத்தை உமக்குக் கொடுத்தவர் யார்?

லெந்து காலப் பாடல்கள் 41

பல்லவி

சுய அதிகாரா, சுந்தரக் குமாரா!
சொந்த உலகந்தனைத்துறந்த மரி மைந்தனான

சரணங்கள்

1. அகிலத்தை ஒரு சொல்லால் அமைத்தனையே,
அதை ஒரு பம்பரம் போலிசைத்தனையே
துகில் போலா காயமதை லகுவாய்ச் சமைத்ததிலே
ஜோதி பல மாதிரியாய்த் தூக்கி அங்கிலங்க வைத்த - சுய

2. கரை மத கற்ற குளம் புவியிலுண்டோ?
கடலுக்கவன் சொல்லன்றிக் கரைகளுண்டோ?
திரைதிரையாகச்சலம் மலைபோல் குவிந்தெழுந்தும்
சேதமின்றிப் பூதலத்தை மாதயவாய் பாதுகாக்கும் - சுய

3. நரர் பலர் கூடியொரு மனைமுடிக்க
நாளெலாமுழைத்திட்டாலும் நாள் பிடிக்குமே
மரமுயிர் தாது இன்னும் வான்புவி அனைத்தையும் ஓர்
வார்த்தையால் ஷணப் பொழுதில் நேர்த்தியாய் உண்டாக்கி
வைத்த - சுய

4. பாவமனுவோர் முகத்தைப் பார்த்தாயே
பாவப்பிணிதோள் சுமந்து தீர்த்தாயே;
சாமியுனைப் பற்றும் தேவ தாசருக்கிரங்க வேண்டும்.
தஞ்சம் தஞ்சம் ஓடிவந்தோம், கெஞ்சுமனுக் கேட்டருள்வாய்

# அருளுரை தலைப்புகள் - ஏப்ரல் 2017

| நாள் | தலைப்பு | ப. ஏற்பாடு | நிருபம் | நற்செய்தி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 07.04.2017 | சமாதானத்தின் இராஜா | சகரி.9:1-12 | எபே.2:11-22 | மாற்.11:1-11 | 24 |
| 14.04.2017 | சிலுவை-அன்பின் வெளிப்பாடு | ஏசா.52:13-53:12 | 1பேதுரு.2:21-25 | மாற்.15:22-41 | 22 |
| 16.04.2017 | உயிர்த்தெழுந்த இயேசுவுக்குள் வாழ்வை கொண்டாடுதல் | 1இரா.17:17-24 | 1கொரி.15:42-58 | லூக்.24:1-12 | 118 |
| 21.04.2017 | கிறிஸ்துவே ஆண்டவர்,கடவுள் என அறிக்கையிடுதல் | யாத்.3:13-17 | கொலோ.1:15-23 | யோவா.20:24-29 | 93 |
| 28.04.2017 | கிறிஸ்துவின் விருந்துக்கான அழைப்பு | ஆதி.18:1-10 | எபி.13:1-8 | யோவா.21:1-14 | 15 |

# ஆராதனை பாடல்கள் - ஏப்ரல் 2017

**07-4-2017**

பா: 34 – ஓசன்னா பாலர் பாடும்
பு: 102 – இயேசு ராஜா முன்னே
கீர்: 46 – ஓசன்னா பாடுவோம்
கீர்: 47 – பவனி செல்கின்றார் ராசா
பா: 86 – தீராத தாகத்தால்
பா: 35 – தயாள இயேசு தேவரீர்

**13-4-1017**

பா: 56 – தெய்வன்புதான்
கீர்: 105 – விந்தைக் கிறிஸ்தேசு
பா: 51 – நான் பாவிதான்
பா: 32 - இந்த அருள் காலதத்தில்

**14-4-2017**

கீர்: 50 – குருசினில் தொங்கியே

**16-4-2017**

பா: 47 – இன்று கிறிஸ்து
கீர்: 53 – எழுந்தார் இறைவன்
கீர்: 54 – யூத ராஜசிங்கம்
பா: - சாந்த இயேசு ஸ்வாமி
பா: – அல்லேலூயா
கீர்: 52 - இந்நாளில் இயேசு ராஜன்

**21-04-2017**

பா: 81 – கர்த்தா நீர் வசிக்கும்
பா: 82 – சபையின் அஸ்திபாரம்
கீர்: 110 – தந்தானைத் துதிப்போமே
பா: 87 - விருந்தைச் சேருமேன்
கீர்: 126 – ஆனந்தமே ஜெயா

**28-04-2017**

பா: 9 – என் நெஞ்சமே
பு : 41 – தூயாதி தூயவரே
கீர்: 13 – துதி தங்கிய
கீர்: 84 – நம்பி வந்தேன்
பா: 94 – இயேசுவின் கைகள்